**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 14.07.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

**ஹரியானா, கோவா** ஆகிய மாநிலங்களுக்கு, **புதிய ஆளுநர்**களும், **லடாக்** யூனியன் பிரதேசத்திற்கு, **புதிய துணை நிலை ஆளுந**ரும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

**பிம்ஸ்டெக்** கூட்டமைப்பின் 2 நாள் **துறைமுகங்கள் மாநாட்**டை, மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், விசாகப்பட்டினத்தில், இன்று தொடக்கி வைத்தார்.

தேசியக் கல்விக் கொள்கை, **அரசியல் காரணங்களுக்காகவே**, தமிழகத்தில், அமலாக்கப்பட வில்லை என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம்சாட்டி உள்ளார்.

புதுச்சேரியில், சட்டமன்ற உறுப்பினர் திரு. **ஜான்குமார்**, அமைச்சராகவும், திரு. தீப்பாய்ந்தான் உள்ளிட்ட மூவர், நியமன சட்டமன்ற உறுப்பினர்களாகவும், இன்று பதவியேற்றுள்ளனர்.

---

*நியமனம்* (6)

ஹரியானா மாநில ஆளுநராக பேராசிரியர் அஷிம் குமார் கோஷ், கோவா மாநில ஆளுநராக, திரு. அசோக் கஜபதி ராஜூ, லடாக் யூனியன் பிரதேசத்தின் துணை நிலை ஆளுநராக, திரு. கவிந்தர் குப்தா ஆகியோரை

நியமித்து, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று உத்தரவிட்டுள்ளார். இதுவரை, லடாக் துணை நிலை ஆளுநராக இருந்த டாக்டர் BD. மிஷ்ராவின் ராஜினாமாவையும், குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

---------------------------

*மோடி-நைஜீரியா* (6)

நைஜீரியா அதிபர் முகமது புஹாரி மறைவு குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். திரு. புஹாரியின் விவேகமும், இந்தியா-நைஜீரியா நட்புறவில், அவருக்கு இருந்த அசையாத உறுதிப்பாடும், தனித்துவமானவை என்று, இரங்கல் செய்தியில் பிரதமர் கூறியுள்ளார். பல்வேறு சந்தர்ப்பங்களில், தாங்கள் சந்தித்து உரையாடியதன் நினைவுகளையும், பிரதமர் பகிர்ந்து கொண்டுள்ளார்.

---------------------------

*பணவீக்கம்* (9)

மொத்த விலைகளின் அடிப்படையிலான பணவீக்கம், கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு ஜூன் மாதத்தில், **மைனஸ் 0.13 சதவிகிதமாக** வீழ்ச்சி அடைந்துள்ளது. உணவுப் பொருட்கள், கனிம எண்ணெய்கள், அடிப்படை உலோகங்கள், கச்சா எண்ணெய், மற்றும் இயற்கை எரிவாயுவின் விலைகள் குறைந்ததே, பணவீக்கம் குறைய காரணம் என்றும், மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரிய வந்துள்ளது.

மொத்த விலை பணவீக்கம், இவ்வாண்டு மார்ச் மாதத்தில் இருந்தே, தொடர்ச்சியாக குறைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*நிதி ஆயோக் (10)*

கடந்த நிதியாண்டின் 3ஆவது காலாண்டிற்கான **வர்த்தகக் கண்காணிப்பு அறிக்கையை**, நிதி ஆயோக் இன்று வெளியிட்டுள்ளது.

-உலக அளவிலான, சந்தைத் தேவை, மற்றும், வினியோகத்துடன் ஒப்பிடுகையில், இந்தியாவின் வர்த்தக நிலை,

- துறை வாரியான செயல்பாடுகள், மற்றும்,

- புதிதாக உருவாகி வரும் வர்த்தக வாய்ப்புகள் குறித்த தகவல்கள், இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

- வர்த்தக வளர்ச்சியை நீடித்த முறையில் பராமரித்து,

- உலக அளவிலான வர்த்தகச் சூழலில், ஒத்துழைப்பு, புதுமையாக்கம், மற்றும், நெகிழ்வுத் தன்மையின் அடிப்படையில், இந்தியாவின் நிலையை வலுப்படுத்துவதற்கான

முக்கிய அகப் பார்வைகள், இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாக, நிதி ஆயோக் தெரிவித்துள்ளது.

---------------------------

*பிம்ஸ்டெக் 1 (11)*

**பிம்ஸ்டெக்** கூட்டமைப்பின் 2 நாள் **துறைமுகங்கள்** மாநாட்டை, மத்திய கப்பல் மற்றும் துறைமுகத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், விசாகப்பட்டினத்தில், இன்று தொடக்கி வைத்தார்.

அண்டை நாடுகளுக்கு முதலிடம் என்பதான இந்தியாவின் கொள்கை, பிராந்திய அளவிலான கடல்சார் ஒத்துழைப்பில், நாட்டின் உறுதிப்பாட்டிற்கு உதாரணம் என்று, தொடக்க விழாவில் பேசுகையில் அவர் கூறினார். இந்தியாவில், உள்நாட்டு துறைமுகங்கள் மூலமான சரக்குப் போக்குவரத்து சேவைகள், கடந்த பத்தாண்டுகளில், 70 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும், பசுமைக் கடல், பசுமைத் துறைமுகம் போன்ற முன் முயற்சிகளால், நீர்வழிப் போக்குவரத்து மூலமான பொருளாதார வளர்ச்சி ஊக்கம் பெறுவதாகவும் அவர் தெரிவித்தார். இம்மாநாடு குறித்து கூடுதல் விவரங்கள்....

(வாய்ஸ்)

*பிம்ஸ்டெக் 2 (10)*

(வாய்ஸ்)

நீலப் பொருளாதாரம், புதுமையாக்கம், மற்றும், நிலையான கூட்டாண்மைகள் என்ற மையக் கருத்து அடிப்படையில், விசாகப்பட்டினம் துறைமுக பொறுப்புக் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, பிம்ஸ்டெக் துறைமுகங்கள் மாநாட்டில், வங்கக் கடல் விளிம்பு நாடுகளுக்கு இடையே, கடல்சார் ஒத்துழைப்பு, மற்றும், பிராந்திய அளவிலான கடல்வழிப் போக்குவரத்துத் தொடர்புகளை மேம்படுத்துவது குறித்து, விரிவாக விவாதிக்கப் படுகிறது. பிம்ஸ்டெக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள, பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை, மற்றும், தாய்லாந்தில் இருந்து, துறைமுகத் துறை

அமைச்சர்கள், மற்றும், துறைமுக அதிகாரிகள், இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

--------------------------

போதை-மாண்டவியா (16)

முன்னேறிய இந்தியாவிற்கான, போதை இல்லா இளைஞர்கள் என்ற தலைப்பில், மத்திய இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சகம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 3 நாள் இளையோர் ஆன்மீக உச்சி மாநாடு, வாரணாசியில், வரும் 18ஆம் தேதி தொடங்க உள்ளது. போதை பொருட்கள் இல்லாத இந்தியாவை உருவாக்கும் வகையில், இளைஞர்கள் தலைமையிலான பல்வேறு முன் முயற்சிகளை வடிவமைப்பது குறித்து, இம்மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும். நாடெங்கிலும் இருந்து 100 ஆன்மீக அமைப்புகளைச் சேர்ந்த, சுமார் 500 இளைஞர் பிரதிநிதிகள், இம்மாநாட்டில் கலந்து கொள்ள இருப்பதாக, இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மாநாட்டின் முடிவில், போதை பழக்கத்தில் இருந்து விடுபடுவதற்கான செயல் திட்டங்கள் அடங்கிய, காசி பிரகடனம் அறிவிக்கப்படும் என்றும், அவர் கூறினார். கார்கில் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வரும் 26ஆம் தேதி கார்கில் வெற்றி தினத்தன்று, கார்கிலில் இருந்து, சிறப்புப் பாத யாத்திரை நடத்தப்படும் என, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

--------------------------

எல். முருகன் (15)

தாய்மொழிக் கல்வியை ஊக்குவிக்கும் வகையிலான, தேசியக் கல்விக் கொள்கை, மற்ற மாநிலங்களில் அமலாகும் நிலையில், தமிழகத்தில், அரசியல் காரணங்களுக்காகவே, இக்கொள்கை அமலாக்கப்பட வில்லை என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம்சாட்டி உள்ளார். இன்று கோவை மேட்டுப் பாளையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்திற்கு தேவையான கல்வி நிதியை, மத்திய அரசு வழங்கவில்லை என்பதை, ஏற்றுக் கொள்ள இயலாது என்றும் கூறினார். ஆதி திராவிடர், மற்றும், பழங்குடியினர் விடுதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாகவும், இவ்விடுதிகளை தமிழக முதலமைச்சர் பார்வையிட்டு, மாணவர்களுக்கு தேவையான வசதிகளை உருவாக்க வேண்டும் என்றும், அவர் வலியுறுத்தினார். குற்றம் சாட்டினார். தொடர்ந்து, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், ஈரோட்டில், செய்தியாளர்களிடம் பேசுகையில், கூட்டுறவு வங்கிகளில், விவசாயிகளின் சிபில் ஸ்கோர் அடிப்படையில், வேளாண் கடன் வழங்கப்படுவதாக கூறப்படுவது குறித்து, மத்திய நிதியமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்றார்.

---------------------------

புதுச்சேரி பதவியேற்பு (16)

புதுச்சேரியில், பிஜேபி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜான்குமார், அமைச்சராக இன்று பதவியேற்றுக் கொண்டார். ஆளுநர் மாளிகையில்

நடைபெற்ற பதவியேற்பு விழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், திரு. ஜான்குமாருக்கு, பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைத்தார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மாநில அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், மற்றும், கடலூர்-புதுச்சேரி மண்டல கிறிஸ்தவ பேராயர் திரு. பிரான்சிஸ் காலிஸ்ட் உட்பட, முக்கிய பிரமுகர்கள் பலரும், பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர். முன்னதாக, திரு. தீப்பாய்ந்தான், திரு. ராஜசேகரன், திரு. வி. செல்வம் ஆகியோர், நியமன சட்டமன்ற உறுப்பினர்களாக, பதவியேற்றுக் கொண்டனர். சட்டப் பேரவை வாளகத்தில் உள்ள சபாநாயகர் அலுவலகத்தில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், புதிய நியமன எம்.எல்.ஏக்களுக்கு, பதவி பிரமாணம் செய்து வைத்தார். தொடர்ந்து இவர்கள் மூவருக்கும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அமைச்சர்கள், மற்றும், சட்டமன்ற உறுப்பினர்கள், சால்வை அணிவித்து, வாழ்த்து தெரிவித்தனர்.

---------------------------

*பிரெஞ்ச் தினம் (7)*

இன்று ஜூலை 14ஆம் தேதி பிரெஞ்ச் தேசிய தினத்தை ஒட்டி, புதுச்சேரியில், கடற்கரை சாலையில் உள்ள போர் வீரர் நினைவுத் தூணில், பிரெஞ்ச் துணைத் தூதர் திரு. எட்டியேன் ரோலண்ட் பீக், புதுச்சேரி அரசு சார்பில், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் ஆகியோர், மலர்

வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியின் போது, இந்தியா-பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் தேசிய கொடிகள் ஏற்றப்பட்டு, தேசிய கீதங்களும் இசைக்கப் பட்டன.

---------------------------

*சந்திரயான்* 1 (3)

நிலவுக்கான இந்தியாவின் **சந்திரயான்-3** விண்கலம், வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டு, இன்றுடன், 2 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*சந்திரயான்* 2 (11)

**(வாய்ஸ்)**

2023ஆம் ஆண்டு, இதே நாளில், இஸ்ரோ விஞ்ஞானிகளால் விண்ணில் ஏவப்பட்ட சந்திரயான் விண்கலம், அதே ஆண்டு ஆகஸ்ட் 3ஆம் தேதி, வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கி, **நிலவை எட்டிய உலகின் 4ஆவது நாடாகவும்**, நிலவின் **தென்துருவப் பகுதியில், மெதுவாக தரையிறங்கும் சாதனையை எட்டிய முதலாவது நாடாகவும்**, இந்தியாவை மேம்படுத்தியது. நிலவின் மேல்பரப்புக் கனிமங்கள், தரைநிலை தட்பவெப்பம், மற்றும், பல்வேறு அம்சங்கள் குறித்து, சந்திரயான் விண்கலம், வெற்றிகரமான ஆய்வுகளை மேற்கொண்டது. சந்திரயான் விண்கலத்தின் **லேண்டர்** கருவி, அறிவியல் ஆராய்ச்சிகளுக்கான **ரோவர்** கருவியுடன் இணைந்து, நிலவில் தரையிறங்கிய இடத்திற்கு, பிரதமர் திரு.

நரேந்திர மோடி, சிவசக்தி முனை எனப் பெயர் சூட்டி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

--------------------------

*விண்வெளி வீரர் (16)*

**ஆக்சியம்-4** திட்டத்தின் கீழ், கடந்த ஜூன் 26ஆம் தேதி முதல், **சர்வதேச விண்வெளி நிலையத்தில்**, பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட இந்திய விண்வெளி வீரர் குரூப் கேப்டன் **சுபான்ஷூ சுக்லா**, இதர 3 விண்வெளி வீரர்களுடன் இணைந்து, இன்று மாலை விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்பும் பயணத்தை மேற்கொள்கிறார். இவர்களை ஏற்றி வரும் விண்கலம், நாளை பிற்பகல் 3 மணி வாக்கில், கலிஃபோர்னியா கடல் பகுதிக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப் படுகிறது. பூமிக்கு திரும்பிய பின்னர் இவர்கள், மருத்துவ நிபுணர்களின் கண்காணிப்பில், பூமியின் புவிஈர்ப்புச் சூழலுக்கு ஏற்ப மீண்டும் மாறுவதற்கான, 7 நாள் மறுவாழ்வுப் பயிற்சிகளில் ஈடுபட உள்ளனர். குரூப் கேப்டன் **சுபான்ஷூ சுக்லா**, 1984ஆம் ஆண்டு விண்வெளிக்கு சென்ற ராகேஷ் ஷர்மாவிற்கு பின்னர், இந்தியாவின் 2ஆவது விண்வெளி வீரரராகவும், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்று திரும்பும் முதலாவது இந்திய விண்வெளி வீரராகவும், திகழ்கிறார். சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி இருக்கையில், குறிப்பாக இந்தியாவிற்கான, 7 அறிவியல் பரிசோதனைகளில், **சுபான்ஷூ சுக்லா** ஈடுபட்டதும் குறிப்பிடத்தக்கது.

--------------------------

*சரோஜா தேவி (15)*

முதுபெரும் திரைப்பட நடிகை **சரோஜா தேவி**, பெங்களூரில் இன்று காலமானார். சிறப்பான நடிப்பினால், **அபிநய சரஸ்வதி** என்றே பெயர் பெற்ற சரோஜா தேவிக்கு வயது, 87. 1955ஆம் ஆண்டு, **மகாகவி காளிதாஸ்** கன்னடத் திரைப்படம் மூலம் தமது நடிப்புலக வாழக்கையை தொடக்கிய அவர், அதன்பின்னர் சுமார் 70 ஆண்டுகளில், தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி உட்பட பல்வேறு மொழிகளில், 200க்கும் மேற்பட்ட படங்களில், முன்னணி வேடங்களில் நடித்துள்ளார். தமிழில், எம்.ஜி.ஆர்-சிவாஜி கணேசன், மற்றும், கன்னடத்தில் டாக்டர் ராஜ்குமாருடன் சரோஜா தேவி நடித்த திரைப்படங்களும், தெலுங்கில் அவர் ஏற்ற **புராணக் கதைப் பாத்திரங்க**ளும் மிகவும் புகழ் பெற்றவை. திரைத் துறைக்கு சரோஜா தேவி ஆற்றிய சிறப்பான சேவைக்காக, மத்திய அரசு அவருக்கு, பத்ம ஸ்ரீ மற்றும் பத்ம பூஷன் விருதுகளையும், 2008ஆம் ஆண்டு, 60ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களின் போது, **வாழ்நாள் சாதனை விருதை**யும் வழங்கி சிறப்பித்தது. தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திர அரசுகளின் பல்வேறு விருதுகளையும் அவர் வென்றுள்ளார்.

---------------------------

*கிரிக்கெட் (5)*

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே, லண்டனில் நடைபெறும், 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 5ஆவது, மற்றும், இறுதி நாளான இன்று, 193 ரன் என்னும் வெற்றி இலக்குடன், 2ஆவது

இன்னிங்ஸ் ஆடும் இந்திய அணி, பகல் உணவு இடைவேளை வரை, 8 விக்கெட் இழப்பிற்கு, 112 ரன் எடுத்து இருந்தது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

**ஹரியானா, கோவா** ஆகிய மாநிலங்களுக்கு, **புதிய ஆளுநர்**களும், **லடாக்** யூனியன் பிரதேசத்திற்கு, **புதிய துணை நிலை ஆளுநரும்** நியமிக்கப் பட்டுள்ளனர்.

**பிம்ஸ்டெக்** கூட்டமைப்பின் 2 நாள் **துறைமுகங்கள் மாநாட்டை**, மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், விசாகப்பட்டினத்தில், இன்று தொடக்கி வைத்தார்.

தேசியக் கல்விக் கொள்கை, **அரசியல் காரணங்களுக்காகவே**, தமிழகத்தில், அமலாக்கப்பட வில்லை என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம்சாட்டி உள்ளார்.

புதுச்சேரியில், சட்டமன்ற உறுப்பினர் **திரு. ஜான்குமார்**, அமைச்சராகவும், திரு. தீப்பாய்ந்தான் உள்ளிட்ட மூவர், நியமன சட்டமன்ற உறுப்பினர்களாகவும், இன்று பதவியேற்றுள்ளனர்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**